THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

## ஏப்ரல் 2024 (மடல் - 24) செய்தி - 4

**கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். நாகூம் 1:7**

# பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 9 |
| Children's Corner | 12 |
| வேத வினாக்கள் | 23 |
| கோதுமை மணி | 26 |
| துணுக்குகள் | 28 |
| ஆலய பக்கம் | 30 |

# ஆயர் மடல்

***“சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்!”***

அப்போஸ்தலர் 8:4

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நமக்குச் செய்த அனைத்து நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். குறிப்பாக கடந்த மாதத்தில் நமது திருச்சபையின் Convention and Retreat சிறப்பாக நடைபெற கிருபை செய்த ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். இந்தப் புதிய மாதத்தில் ஆண்டவரை அறியாத மக்களுக்கு ஆண்டவரின் அன்பைக் கொண்டு செல்லுகின்ற மிஷனெரி சங்கத்திற்கான ஆதரவு நிகள்வுகள் நடைபெற இருக்கின்றது. குடும்பமாக, குழுக்களாக திருச்சபையாக நாம் சிறப்பு நிகழ்வுகளில் உற்சாகமாக பங்கு பெறுவதோடு, நற்செய்தி ஊழியத்தையும் ஆதரிக்கும்படி அன்புடன் அழைக்கிறேன். நாம் பெற்றுக்கொண்ட மகிழ்ச்சியின் வாழ்வை எல்லா மக்களும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்கின்ற தரிசனத்தோடு நாம் குடும்பமாக நற்செய்திப் பணியில் பங்கு கொள்வோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

லூக்கா நற்செய்தி நூலை எழுதிய லூக்கா, கலிலேயாவில் ஆரம்பித்து (லூக்கா 1:26) எருசலேமில் முடிக்கிறார். (லூக்கா 24:50-53) அதன் தொடர்ச்சியான அப்போஸ்தருடைய நடபடிகள் நூலை எழுதும் பொழுது லூக்கா எருசலேம் தொடங்கி (அப்போ 1-2) உலகின் கடைசி எல்லை வரை (ரோம் நகர் வரை) கொண்டு செல்கிறார். (அப்போ 27:17-31) இதில் ஒரு தெளிவானத் திட்டம் இருப்பதை நாம் காணமுடிகிறது. ***“பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.”*** (அப்போ 1:8) என்று இயேசு கூறியதைத் திருத்தூர்கள் எப்படி நிறைவேற்றினார்கள் என்பதை எடுத்துரைப்பதே அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் நோக்கமாகும். கிறிஸ்தவ சமயம் எப்படி உலக சமயமாக வளர்கிறது என்பதைப் படிப்படியாக ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். ***அதோடு இறைவனின் நற்செய்தி ஆற்றல் வாய்ந்தது,*** அது உலகின் கடைசி எல்லை வரை பரவத் தொடங்கிவிட்டது. எந்த ஒரு சக்தியாலும் அதைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதையும் விளக்கவே இந்நூல் எழுதப்பட்டது.

ஸ்தேவானின் மரணத்திற்குப் பின்பு எருசலேம் திருச்சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. இங்குதான் முதன் முதலாகக் கிறிஸ்தவ சமுதாயத்துக்குச் ***சபை*** (Church) என்கின்ற பெயர் உபயோக படுத்தப்படுகிறது. கிறிஸ்தவர்கள்

கடுமையாகத் துன்பப்படுத்தப்பட்டார்கள். குறிப்பாக சவுல் யூத மார்க்கத்தில் கடுமையான வைராக்கியம் கொண்டவர் என்பதால் கிறித்தவ சமயம் யூத சமயத்தை அழித்து விடுமோ என்கின்ற அச்சம் அவருக்குள் இருந்தது. ***எனவே கிறிஸ்தவர்களை அழிப்பதில் தீவிரம் காட்டினார். இதனால் கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப் பட்டார்கள். இந்நிகழ்வே நற்செய்தி பரவுவதற்கு ஏதுகரமாக அமைந்தது.*** சிதறடிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் பயந்து அமைதியாக இருந்துவிடவில்லை எங்கும் திரிந்து சென்று சுவிசேஷத்தை அறிவித்தார்கள். சென்ற இடமெங்கும் சாட்சியாக வாழ்ந்தார்கள்.

இதுவரை நற்செய்தி எருசலேமுக்கு மட்டுமே சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது சுவிசேஷம் எங்கும் பரவத் தொடங்கியது. ***நற்செய்தியை எந்தத் துன்பமோ சட்டமோ கட்டுப்படுத்த முடியாது.*** திருச்சபையை அழிக்க எடுத்த முயற்சிதான் நற்செய்தி உலகமெங்கும் பரவக் காரணமானது. சமாரியர்கள் பிற இனக் கலப்பு என்பதால் யூதர்களால் ஒதுக்கப்பட்டவர்கள். ஆனால், இப்பொழுது சமாரியாவுக்கும் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. நற்செய்தி வழியாக உணர்வு ரீதியான, மனரீதியான தடைகள் அனைத்தும் தகர்த்தெறியப்படுகிறது. கிறிஸ்துவின் அடியார்களுக்குத் துன்பமும் நெருக்கடியும் எத்தனை அதிகமாக வருகிறதோ அதற்கு அதிகமாகக் கிறிஸ்துவின் நற்செய்தி வல்லமையாய்ப் பரவியது என்பது நமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது.

இந்த மாதம் நாமும் குடும்பமாக நற்செய்திபணிக்காக நம்மை அர்ப்பணிக்க இருக்கிறோம். துன்பப்படுத்தப்பட்ட எருசலேம் திருச்சபை மக்களே எங்கும் திரிந்து நற்செய்தி அறிவித்தார்கள் என்றால், மகிழ்ச்சியும், மனநிறைவான வாழ்வு பெற்றிருக்கின்ற நாம் எவ்வளவு உற்சாகமாக நற்செய்தி அறிவிக்கவேண்டும்?. திருச்சபை நமக்குக் கொடுத்திருக்கின்ற நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி நமது கடமையை நிறைவேற்றுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த திருநாள் நல்வாழ்த்துக்களை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்!**

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail :asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
*Rev. Dr. A. Samuel*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாக பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

***“கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.”*** *நாகூம் 1:7*

***நாகூம்*** என்கிற சொல்லுக்கு ***யாவே ஆறுதல்*** அளிக்கிறார் என்று பொருள். இவர் ***எல்கோசா*** ஊரைச் சார்ந்தவர். நாகூம்மைக் குறித்த வேறு எந்தக் குறிப்புகளும் சொல்லப்படவில்லை. யூதேயாவை சார்ந்தவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இஸ்ரவேல் மக்களை தொடர்ந்து கொடுமைப்படுத்தி வந்த அசீரிய அரசும், அதன் தலை நகர் நினிவேயும் வீழ்ச்சியுற்று அழிக்கப்பட்டபோது அடைந்த மகிழ்ச்சியை பிரதிபலிக்கும் பாடலாக இந்த நாகூம் நூல் அமைந்திருக்கிறது. குறிப்பாக ஆணவம் கொண்டு பிற மக்களை கொடுமைப்படுத்தும் எந்த நாட்டையும் ஆட்சியாளர்களையும் ஆண்டவர் தண்டிக்காமல் விடார் என்பதையும், ஆணவத்தோடு அநீதி செய்கிற மக்களை அழிக்கும் ஆண்டவர் தம்முடைய மக்களுக்கு எப்படிப்பட்டவர் என்பதையும் தீர்க்கமாக உரைக்கப்பட்டிருக்கிறது.

### ***1. தம்மை நம்புகிற மக்களுக்கு ஆண்டவர் நல்லவர்***

அசீரிய அரசு அதன் அதிகாரத்தின் உச்சநிலையை அடைந்திருந்த காலம். அதன் தலைநகரமான நினிவேக்கு இணையான சிறப்பு மிக்க நகரை அக்காலத்தில் உலகில் காண முடியாது. அதோடு அசீரிய அரசும் அதிகாரிகளும் மிக கடுமையாகப் பிற இன மக்களைக் குறிப்பாக, யூதர்களை கொடுமைப் படுத்தினார்கள். அவர்கள் செய்த கொடுமைகளுக்கு அளவே இல்லை. அதே வேளையில் அசீரிய அரசும் அதிகாரிகளும் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இந்த அநீதியின் உச்ச நிலைக்கு எதிராக ஆண்டவர் செயல்படுகிறார். செப்பனியா தீர்க்கனைக் கொண்டு இறைவாக்குச் சொல்கிறார். (செப்பனியா 2:13) கிமு 614ல் மேதியர்களும் பாபிலோனியர்களும் இணைந்து அசீரியர்களை தாக்கினார்கள். நினிவேயின் அரண்மனைகளும் கோயில்களும் அழிந்து தரைமட்டமாகியது. நினிவே மன்னன் கொல்லப்பட்டான். ஆண்டவர் அநீதியுள்ள மக்களையும், ஆணவக்காரர்களையும் அழிக்கிறார். அதேவேளையில் தம்முடைய பிள்ளைகளுக்கு அவர் நல்லவராகவே இருக்கிறார். (சங்கீதம் 73:1)

**எப்படி எல்லாம் ஆண்டவர் நல்லவராக இருக்கிறார்?**

(a) தமது படைப்புகளை மக்களுக்கு கொடுத்து பராமரிப்பதில்

(b) எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்களை விடுவிப்பதில்.

(c) இஸ்ரவேல் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையில்

(d) நியாயப்பிரமாணச் சட்டத் திட்டங்களைக் கொடுத்ததில் ஆண்டவர் நல்லவராக இருக்கிறார்.

(e) எல்லாவற்றிற்கும்மேலாக ஆண்டவரின் மன்னிப்பும், எளியோர் மீது காட்டும் பரிவும், அன்பும் கர்த்தர் எவ்வளவு நல்லவர் என்பதை சுட்டிக்காட்டுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்கு மட்டுமல்ல, நம் ஒவ்வொருவருக்கும் அவர் நல்லவராகவே இருக்கிறார்.

### *II. தம்மை நம்புகிறவர்களுக்கு ஆண்டவர் அரணான கோட்டை.*

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்காகப் பெரிய கோட்டைகள் அமைக்கப் பட்டிருக்கும். எதிரிகள் எளிதில் உள்ளே வர முடியாத அளவிற்கு அந்தக் கோட்டை வலுவானதும் பாதுகாப்பு மிக்கதாகவும் இருக்கும். போர் மற்றும் ஆபத்து காலங்களில் பாதுகாப்பு அளிப்பதற்காக இந்த அரண்கள் ஏற்படுத்தப்படுகிறது. ஆண்டவர் தம்முடைய மக்களுக்கு அரணாக இருக்கிறார். அன்றைய கானான் நாட்டில் எதிரியிடமிருந்து தப்பி ஓடி மறைந்து கொள்வதற்கு மறைவிடங்கள் இயற்கையாகவே இருந்தது. மலைகளும் குகைகளும் அவர்களுக்கு பாதுகாப்பைக் கொடுத்தது. (நியாதிபதிகள் 6:2, சங்கீதம் 18:1,2)

இறைவனின் பாதுகாப்பானது, குஞ்சுகளுக்கு தாய் கோழியின் சிறகுகள் எப்படி உள்ளே சுகம், வெளியே பாதுகாப்பாக இருக்கிறதோ, அதேபோன்று ஆண்டவருடைய பிள்ளைகளையும் ஆண்டவர் பாதுகாக்கிறார். (ரூத் 2:12) ஆபத்துகள் நிறைந்த இந்த உலகில் ஆண்டவர் நம்மைப் பாதுகாக்கிறார். ஆபத்துக் காலத்தில் அவரே நமக்கு அடைக்கலமாக இருக்கிறார்.

### III. *தம்மை நம்புகின்ற மக்களை ஆண்டவர் அறிந்திருக்கிறார்:*

ஆண்டவர் எல்லாரையும், எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவானது என்று ஒன்றுமில்லை. (சங்கீதம் 139:1-4) அவரிடம் நாம் எதையும் மறைக்க இயலாது. ஏனெனில் இவர் நம்மை முழுமையாக அறிந்திருக்கிறார். இந்த புதிய மாதத்திலும் ஆண்டவர் நமக்கு நல்லவராக இருக்கிறார். கர்த்தர் நமக்கு அரணான கோட்டையாய் இருந்த நம்மை பாதுகாக்கிறார். அண்டவர் நம்மை நன்கு அறிந்தும் இருக்கிறார். நமது தேவைகளை எல்லாவற்றையும் நிறைவேற்ற வல்லவராகவும் இருக்கிறார். ஆண்டவரையே சார்ந்து வாழ்வோம், ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்.

**உங்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்!**

*மீட்பரின் பணியில்*
Mrs. S. *ஜெபா சாமுவேல்*
**ஆயரம்மா**

# ஆண்கள் பகுதி

## நற்செய்தி பணி - Evangelism

"இராராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும், (மத் 24 14). உலகத்தின் முடிவை எதிர் நோக்கி, கிறிஸ்துவே வாரும் (மாரநாதா) என்று காத்துக் கொண்டிருக்கிற விசுவாசிகளாகிய நாம் செய்யவேண்டிய பெரிய பணியே நற்செய்தி பணி ஆகும். அது போலவே, இது ஆணடவர் இயேசு அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு கட்டளை இட்டு அருளிய பணி ஆகும். “ஜாதிகளுக்குச் சுவிசேஷம்” மட்டுமல்ல “நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி சத்தியத்தை உபதேசியுங்கள்...” என்பது இயேசு கிறிஸ்து நமக்கு அருளிய கட்டளை(மத் :28 19).

**<u>நற்செய்தி பணி - ஆண்டவரின் கரிசனை</u>**

தேவனுடைய முதல் கரிசனை அழிந்து போகிற ஆத்துமாக்கள் தான். காணாமல் போன ஆட்டை குறித்த கரிசனை மேய்ப்பன் ஆகிய நம் ஆண்டவருக்கு அதிகமாக உண்டு. அவர்களும் மந்தையில் சேர்க்கப்படும் வரை தேவன் அவர்களைக் குறித்த நினைவிலேயே இருக்கிறார். காணாமல் போன ஒரு ஆட்டை தேடி கண்டுபிடிக்க, மற்ற தொண்ணூற்றி ஒன்பது ஆடுகளையும் விட்டு சென்று ... தேடி கண்டுபிடிக்கும் அந்த அன்பு என்பது தேவன் ஆத்துமாக்கள் மீது கொண்ட கரிசனையின் வெளிப்பாடு அல்லவா?. ஒருவரும் கெட்டுப்போக விரும்பாதவர் ...எல்லாரும் நித்திய ஜீவனை அடையம் படி இவ்வுலகுக்கு வந்து, எல்லாருக்காகவும் தம்மையே தந்தவர் ...அழிந்து போகிற ஆத்துமாக்கள் மீது ஆண்டவர் கொண்ட அன்பின் பிரதிபலிப்பாகத்தான் அருள்பணி அமைகிறது.

**<u>நற்செய்தி பணி - அனைவருக்கும் உரியது</u>**

“உலகம் முழுவதற்கும் சுவிசேஷம் அறிவிப்பது மனிதன் விரும்பினால் தெரிவு செய்யவும், விரும்பாவிட்டால் விட்டுவிடுவதற்கும் இதுவொரு தனிப்பட்ட மனிதனின் கிறிஸ்தவ தெரிந்தெடுப்பு அல்ல. அது கிறிஸ்துவிடமிருந்து நம்மிடம் வந்த தேவனது சுபாவத்தில் வேரூன்றப்பட்டது. மிஷனரி பணியானது ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதன் பிரத்தியேக அடையாளம்” என்கிறார் ஜேம்ஸ் ஸ்டூவர்ட் அவர்கள்.

சுவிசேஷத்தைக் கொண்டிருக்கிற விசுவாசிகள் அதனைத் தங்களுக்குள்ளே திரும்ப திரும்ப முணுமுணுத்துக் கொண்டிருக்கிற அதேவேளை, தங்கள் வாழ்நாளில்

ஒரு முறை கூட இரட்சிப்பின் நற்செய்தியைக் கேட்டிராத கோடிக்கணக்கான மக்கள் கேள்விப்படாமலேயே நித்திய நரக அக்கினியில் விழுந்து கொண்டிருக்கின்றார்கள், எனவே, ஒரு முறைகூட சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள் இருக்கையில் இருமுறை கேட்பதற்கு எவருக்கும் உரிமையில்லை" என்று ஒஸ்வர்ல்ட் ஜே.ஸ்மித் என்கிற தேவ மனிதர் கூறுகிறார். எனவே, ஆண்டவரின் அழைப்பைப் பெற்ற நம் அனைவருக்கும் ஆண்டவர் கொடுக்கின்ற அழைப்பே அருள்பணி என்பதாக இருக்கிறது.

**<u>நற்செய்தி பணி - திருச்சபையின் பொறுப்பு</u>**

சபையின் பொறுப்பு என்பது என்ன, நிறைவேற்ற வேண்டிய பணி என்ன என்பதை சீஷருக்கு விளக்கமாகக் கூறிய பின்னரே இயேசு பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப்.1:8); இன்னும், "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்றார் என்றும் (மத்.28: 19,20) வாசிக்கிறோம்.

"ஒரு பெரிதான சபை என்பதற்கான அடையாளம், அது எத்தனை ஆசனங்களைக் கொண்டிருக்கிறது என்பதல்ல; அது எத்தனை பேரை அனுப்பியுள்ளது என்பதே" என்கிறார் மைக் ஸ்டச்கரா. பரிசுத்த ஆவியானவர் மிஷனரி ஊழியத்திற்கு அழைத்தபோது அந்தியோகியா சபையினர் திரும்பவும், "உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் (பர்னபாவையும் சவுலையும்) கைகளை வைத்து அனுப்பினார்கள்" அப்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டுச் செலூக்கியா பட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி, அங்கிருந்து சீப்புரு தீவுக்குப் போனார்கள் (அப்.13.2-4) , என்பதாக நாம் ஆதி சபையின் ஊழியத்தைப் பார்க்கிறோம்.

நமது சுயஅன்பினால் நாம் ஆத்தும தாகம் கொள்வதில்லை. கிறிஸ்துவின் அன்பு நம்மை நிரப்புகையில், அந்த அன்பைப் பகிராமல் இருக்கமுடியாது. கிறிஸ்துவின் அன்பு நமக்குள் பெருக்கெடுத்து, அது மற்றவர்களை அடைய வேண்டும். பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவின் அன்பு எங்களுடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கின்றது (ரோமர் 5:5). என்று பவுல் அடிகளார் கூறுகிறார். கிறிஸ்துவின் ஒப்பற்ற மரணத்தையும், உயிர்ப்பையும், அவர் தரும் விடுதலையையும் கேள்விப்பட்டிராத சகல மக்களுக்கும் அவரை அறிவிக்க நம்மை ஒப்புவிப்போம். பவுலடியாரின் இருதயத்தில் ஊற்றப்பட்ட அன்பு, சாது சுந்தர் சிங்கின் இருதயத்தில் ஊற்றப்பட்ட அந்த தேவ அன்பு, அவர்களை நெருக்கி ஏவியதைப் போல, நமது

இருதயத்திலும் ஊற்றப்பட்டு, நம்மையும் நெருக்கி ஏவும்படி, நமது இருதயத்தைத் திறந்து கொடுப்போம். அருள்பணி செய்பவர்களாய் ஆண்டவர் திட்டத்தை நிறைவேற்ற பாடுபடுவோம் .... ஆண்டவர் தாமே தம்முடைய அளவற்ற அன்பால் நம்மை நிரப்பி அவர்பணி செய்ய நம்மை ஆசீர்வதித்து நடத்துவராக ... ஆமென்.

அருட்பணி ஆண்டவர் அருளிய பணி - அவர்க்காய்
அவனியை ஆயத்தம் ஆக்கிடும் பணி ...!!!

அறுப்பு மிகுதி ஆனாலும் ஆட்கள் கொஞ்சமே
ஆண்டவர் இயேசு அன்று கொண்ட பாரமே ..
அறுப்புக்கு எஜமான் ஆட்கள் அனுப்பவேண்டியே
அனுதினமும் வேண்டிடுவோம் அவர் பாதமே ...!!! (லூக்கா 10 :2)

உலகெங்கும் புறப்பட்டுப் போங்கள் என்றாரே
உயிரூட்டும் ஒளியாக உலகில் வந்தாரே ...!
சத்திய சுவிஷேஷ பாதை காட்டுவோம் ...
சகலரையும் இயேசுவுக்கு சீஷர் ஆக்குவோம் ...!! (மத்தேயு 28 : 19)

சிறைப்பட்டோர் விடுதலை செய்திடல் வேண்டும்..
நருங்குண்டோர் இதயங்கள் குணப்பட வேண்டும் ...!
குருடருக்கு பார்வை வந்திட வேண்டும் ..!!
வறியோர்க்கு சுவிஷேடம் தந்திட வேண்டும் ...!! (லூக்கா 4:18)

ஆண்டவர் இயேசுவின் தரிசனம் கொள்வோம்..
அழிந்திடும் ஆத்துமாவில் கரிசனம் கொள்வோம் ...!!
இழந்ததை தேடவும் அதை இரட்சிக்கவுமே ..
இயேசு தந்த பாதையில் நாம் இறைபணி செய்வோம்...! (லூக்கா 19 : 10)

கிறிஸ்துவில் அன்புடன்
**ஜெய சந்திர ராஜா**



**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



## முதல் வெளிநாட்டு மிஷனரி - யோனா




இஸ்ரவேலில் இருந்து வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்ட முதல் மிஷனரியாக யோனா வேதாகமத்தில் காணப்படுகிறார். இயேசுகிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக்கொண்ட நாமனைவரும் இயேசுவைக் குறித்து உலகத்திற்கு அறிவிக்க வேண்டிய அருட்பணியாளர்கள் (மாற்கு 16:15). யோனாவின் வாழ்க்கை நமக்கு கற்பிக்கும் பாடத்தை சற்று தியானிப்போம்.

### யோனாவின் கீழ்ப்படியாமை

யோனா வட நாடான இஸ்ரவேலின் தீர்க்கதரிசி. அமித்தாயியின் புதல்வர். இஸ்ரவேலின் மிகவும் ஆற்றலுள்ள அரசராயிருந்த இரண்டாம் யெரொபெயாமின் ஆட்சி காலத்தில் ஊழியம் செய்தார் (2 இராஜா.14:25). நினிவே இஸ்ரவேலுக்கு வடகிழக்கிலும், தர்ஷீஸ் மேற்குப் பகுதியிலும் காணப்படுகிறது. "நினிவே மக்களின் அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது. அதற்கு விரோதமாக பிரசங்கி" என்ற கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு வந்தது (யோனா 1:2). அசீரியா பேரரசின் அன்றைய தலைநகரம் நினிவே. அசீரியா இஸ்ரவேலுக்கு எப்போதும் பயத்தை உண்டாக்கும் ராஜ்யமாகவே இருந்தது. தங்களை கஷ்டப்படுத்தும் அரசை கண்டிக்க மனமில்லாமல் இருந்திருக்கலாம் யோனாவுக்கு. கர்த்தருடைய வார்த்தை நினிவேக்கு போகும்படி இருந்தாலும், திசை மாறி தர்ஷீசுக்கு போகும் கப்பலில் ஏறிவிட்டார் யோனா.

- தேவனின் வார்த்தையை எங்கு எப்படி பகிர வேண்டும் என்று தேவன் நம்மை உணர்த்தும்போது, அதற்கு மறுப்பு தெரிவிக்காது கீழ்ப்படிதல் அவசியம். நாம் தெரிந்துகொள்ளும் வழி நமக்கு ஒருவேளை சரியாகத் தோன்றினாலும், சீக்கிரத்தில் நம்மை பாவ சமுத்திர ஆழத்தில் தள்ளிவிடக் கூடும். கவனம் மிக அவசியம்.

### மீனின் வயிற்றில் யோனா

கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படியாத யோனாவின் மூலம் நடந்த காரியம் நாமனைவரும் அறிந்ததே. புயலின் மூலம் தேவன் யோனாவின் பயணத்தை தடுக்கிறார். தன் தவறை உணர்ந்த யோனா தன்னை கடலில் போடும்படி கூறுகிறார். ஒருவேளை தன் வாழ்வு முடிவுக்கு வந்துவிட்டது என்று நினைத்திருக்கலாம் யோனா. அல்லது கர்த்தர் தன்னை காப்பாற்றுவார் என்று நம்பியியிருந்திருக்கலாம். கர்த்தர் அற்புதமாக ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தி, மூன்று நாட்கள் யோனாவை உயிருடன் காக்கிறார். கர்த்தரை விட்டு ஓடி வந்த யோனா, இப்போது மீனின் வயிற்றிலிருந்து கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்கிறார். கர்த்தர் மீனுக்கு கட்டளையிட, அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது. தவறை உணர்ந்து தம்மை நோக்கி விண்ணப்பம் பண்ணிய யோனாவை கர்த்தர் ஒரு சேதமுமின்றி கரையில் கொண்டு சேர்த்தார். இது மிகுந்த ஆச்சரியம்! கர்த்தரின் வார்த்தையை கொண்டு செல்லும் தூதுவனாய் இருந்த யோனாவுக்கு, கர்த்தரின் வல்லமையை தன் வாழ்வில் கண்டுகொள்ள இது ஒரு சந்தர்ப்பமாய் மாறியது.




- நாம் கர்த்தரை விட்டு தூரமாய் போனாலும், தவறை உணர்ந்து மனம் திரும்பும்போது, கர்த்தர் நம்மை இக்கட்டுகளுக்கு நீங்கலாக்கி விடுவிக்கும் இரட்சகராக இன்றும் இருக்கிறார்.

**இரண்டாம் அழைப்பு**

தனக்கு கீழ்ப்படியாமல் சென்றாலும், தன் அருட்பணியை நிறைவேற்ற இரண்டாம் முறை யோனாவை அழைக்கிறார் கர்த்தர். "நான் உனக்கும் கற்பிக்கும் வார்த்தையை நினிவேக்கு விரோதமாய் போய் பிரசங்கி" என்று கர்த்தர் கூறுகிறார் (யோனா 3:2). யோனாவை அழைத்த தேவன் அவருக்கு இன்னபடி பேச வேண்டும் என்று கற்பித்து அனுப்புகிறார். இம்முறை கீழ்ப்படிந்து நினிவேக்கு சென்றார் யோனா. மூன்று நாள் பிரயாண விஸ்தாரமாய் இருந்த, மகா பெரிய நகரமாகிய நினிவேக்கு சென்று, ஒரு நாள் பிரயாணம் பண்ணி, "இன்னும் நாற்பது நாள் உண்டு. அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்" என்ற ஒரு வரி பிரசங்கத்தை செய்கிறார் யோனா. ஒரு வரி பிரசங்கமாய் இருந்தாலும், வரலாறு காணாத மனமாற்றம் நினிவேயில் உண்டானது. நகரம் முழுவதும் தீமையை விட்டு உபவாசத்துக்கும், ஜெபத்துக்கும், நற்பாதைக்கும் மாறியது. எவ்வளவு பயனுள்ள ஒரு பிரசங்க ஊழியம்! அது யோனாவின் கீழ்ப்படிதலின் பலன்.

- கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவர் கற்பிக்கும்படி அவர் ஊழியத்தை நாம் செய்யும்போது, அதின் பலனைக் காணமுடியும்.



**காரணமில்லாத விசனமும் எரிச்சலும்**

மக்கள் மனம் திரும்பியதைக் கண்ட கர்த்தர் பாவத்தை மன்னித்து, நினிவேயை அழிக்காதே விட்டார். அது யோனாவுக்கு மிகவும் விசனத்தை உண்டாக்கியது. தன் பிரசங்கத்தைக் கேட்டு, ஜனங்கள் மனம் திரும்பியதைக் குறித்து சந்தோஷப்பட வேண்டிய யோனா, தான் கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறாது போனதைக் குறித்து கவலைப்படுகிறார். கர்த்தரிடம் கோபப்படுகிறார். தன் ஜீவனை எடுத்துக்கொள்ள சொல்கிறார். நகரத்துக்கு சம்பவிப்பதை காண இருந்த யோனாவுக்கு ஒரு ஆமணக்கு செடி மூலம் நிழல் கொடுத்து, பின்னர் அதைப் பூச்சியை வைத்து அழித்துவிட்டு, உஷ்ணக்காற்றையும் அனுப்புகிறார். யோனாவின் எரிச்சல் இன்னும் அதிகமாயிற்று. கர்த்தர் அழிந்து போன செடியின் மூலம், அழிந்து போகும் ஜனங்கள் மேலும், மிருகஜீவன்கள் மேலும் தனக்கு இருக்கும் கரிசனையை வெளிப்படுத்துகிறார். அதன்பின் யோனா நிச்சயமாக தன் தவறை உணர்ந்திருக்க வேண்டும். யோனாவோடு இயேசு தம்மை உவமித்து புதிய ஏற்பாட்டில் கூறியுள்ளார் (மத்.12:39,40). கிறிஸ்து மூன்று நாளைக்குப் பின் உயிரோடு எழுவதற்கு அடையாளமாக, மீனின் வயிற்றில் மூன்று நாள் இருந்து, மீண்டு வந்த யோனாவைத் தேவன் தெரிந்துகொண்டார்.

- யோனாவிற்காக புயலை, மீனை, ஆமணக்குச் செடியை, பூச்சியை, உஷ்ணமான கீழ்க்காற்றை ஆயத்தப்படுத்திய தேவன், நமது வாழ்விலும் பல காரியங்களை அனுமதித்து, அதன் மூலம் நம் சுயத்தை அழித்து, தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற நம்மை ஆயத்தப்படுத்துகிறார். தேவன் நம்மை அழைத்து கற்பிக்கும்போது, அதற்கு பூரணமாய் செவிகொடுத்து, அருட்பணியை செய்வோம். நாம் எதிர்பார்க்கும் பலனை அல்ல, தேவன் விரும்பும் பலனை நம் அருட்பணி கொடுக்கட்டும். தேவநாமம் மாத்திரம் மகிமைப்படட்டும்.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### தொற்காள்
### அன்புடன் கிரியை நடப்பித்த பெண் - அப்.9:36 - 42

மத்தியத்தரைக் கடலோரப் பகுதியிலுள்ள யோப்பா என்னும் துறைமுகப் பட்டிணத்தில் தொற்காள் வாழ்ந்து வந்தாள். கிரேக்கப் பாஷையில் தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் - அர்த்தம் பெண்மான். இவள் சீஷி. நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய் செய்து கொண்டு வந்தாள். இது இயேசுகிறிஸ்துவில் அவள் வைத்த விசுவாசத்தையும் காட்டுகிறது.

தொற்காள் ஒரு நாள் நோய் வாய்ப்பட்டு மரித்துப்போனாள். அவள் சக விசுவாசிகள், பேதுருவுக்கு இரண்டு சீஷர்களை அனுப்பி அவனை அழைத்தார்கள். அவர்கள் விசுவாசம் கிரியை செய்தது. பேதுருவை மேல் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகள் எல்லாரும் அழுது தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்தார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போகச் செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, பிரேதத்தின் புறமாய் திரும்பி, "தபீத்தாளே எழுந்திரு" என்றான். உடனே அவள் உயிர் பெற்றாள்.

**தடை செய்யாத விசுவாசக்கிரியை:**

"வார்த்தை பேசுவதை விட வாழ்க்கையே அதிகம் பேசும்" என்பதற்கு தொற்காளின் வாழ்க்கை முன் உதாரணம்.

**நற்கிரியைகளின் சொந்தக்காரி:**

தனது வாழ்நாள் முழுவதும் தன்னால் இயன்ற அநேக நற்கிரியைகளை செய்து வந்தாள். நாமும் கூட நம் வாழ்க்கையில் முடிந்தவரை நற்கிரியைகளைச் செய்வோம். அதில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

நற்கிரியைகளைச் செய்து வந்த தபீத்தாளின் கிரியை இன்னும் சிறிதுகாலம் வெளிப்பட தேவன் சித்தம் கொண்டபடியால் அவர் உயிரோடு எழுப்பப்பட்டார். இது அப்போஸ்தலரால் செய்யப்பட்ட முதல் உயிர்த்தெழுதல். தேவனுடைய வார்த்தை இந்த சம்பவத்தின் மூலம் உறுதிபடுத்தப்பட்டது. அவள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் செயலாக்கத்திற்கு ஒரு சாட்சியாய் மாறினாள்.

நாமும் நம்மை சுற்றியிருக்கும். தேவையோடு இருக்கும் மக்களுக்கு அன்பை காட்டுவோம். நற்கிரியைகளைச் செய்வோம்! கிறிஸ்துவின் பணியை நிறைவேற்றுவோம்!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

Dear Children,

The theme this April is "**EVANGELISM**".



Evangelizing is very important.

Evangelism is when you share the gospel of Jesus with others. This means you tell others about how Jesus died for our sins, was buried, and rose again.

Jesus gave all Christians a big command, and it is called the Great Commission.




## THE GREAT COMISSION


As Jesus is ascending into Heaven he commanded his disciples that they must be His witnesses in all the earth.

They must spread the good news of Jesus' resurrection and offer of salvation to everyone who will listen.

This work is still not complete and so we must carry on with the Great Commission and continue to share the good news of the salvation that Jesus gives us to everyone who will listen.

## FIVE WAYS TO BE INVOLVED IN EVANGELISM

1. Be mission – minded.
2. Understand that God is very much mission – minded.
3. Gain more understanding about the Gospels
4. Pray for others.
5. Share the gospel as the Holy Spirit leads.



## MAJOR BIBLE EVENTS #4 - CONFUSION

After Noah and his family came off the Ark, God commanded them to spread out and fill the earth.



But the disobedient descendants of Noah decided to stay in one place, building a tall tower that they hoped would help keep them all together.

When the Lord saw their disobedience, He was displeased, and confused the language of the people so they couldn't understand each other.

In this way, the Lord God scattered them over all the face of the earth.

## CHILDREN IN THE BIBLE #4 – SAMUEL


Samuel was just a young boy when God used him to deliver a big message.





Samuel grew up to become a prophet of God and a leader for the Israelites. When God called Samuel to rise and shine, he listened and obeyed God's will.

**Daily Application** – Children, God communicates in many ways. You are never too young for God to use you

## SAYING IT WITH PICTURES...





My sheep listen to my voice; I know them, and they follow me.
– John 10:27 NIV




Neither is there salvation in any other: for there is none other name under heaven given among men, whereby we must be saved.
– Acts 4:12 KJV

## TINY TOTS SECTION

### COLOR IN...



# THE TOWER OF BABEL

Long ago, when everyone spoke the same language, they tried to build a tower to heaven. This angered God, so He made them all speak different languages. They never finished the tower because they couldn't understand one another!

Draw the worker's path to the top of the tower.




| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N |

| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |




You can tell someone about Jesus on the
___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___.
20 5 12 5 16 8 15 14 5

You can ___ ___ ___ ___ to someone in person.
20 1 12 11

Or, you can ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___!
19 5 14 4 1 14 15 20 5

## Spot the Differences for Samuel Obeyed God

Compare the picture on the top with the picture on bottom. Circle the 10 things that are different.



## THE CALL OF SAMUEL

Speak LORD for your SERVANT is LISTENING.

# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – 'EVANGELISM' QUIZ

1. What is the Great Commission? (Matt. 28:19)

a. Make disciples; witness about Jesus. b. Go; and make lots of money.
c. Do good; Be religious. d. Help the poor and needy.

2. What did Jesus promise, with the instructions to share His Word? (Matt 28:20)

a. That the disciples will always be safe. b. That they need not worry.
c. That He will be with them always. d. That they will not want.

3. After Jesus returned to heaven, what were the disciples to do? (Acts 1:4,5)

a. Go fishing. b. Leave Jerusalem.
c. Wait for the Holy Spirit. d. Nothing.

4. The Great Commission is Jesus' command to ________________

a. Pastors and Church elders. b. Missionaries.
c. Teachers and Preachers. d. All Christians.

5. The believers were first called Christians at_______. (Acts 11:26)

a. Antioch. b. Seleucia.
c. Jerusalem. d. Corinth.

6. Which of the below was NOT an activity of the early church? (Acts 2:42)

a. Fellowship. b. Breaking of Bread.
c. Evangelizing Gentiles. d. None of the above.

7. But Paul taught both Jews and ____________ about Jesus.

a. Indians. b. Germans.
c. Americans. d. Gentiles.

8. ______ was a young gentile believer, taught by Paul. (Acts 16:1)

a. Timothy. b. Mark.
c. Barnabas. d. Stephen.

9 What did Jesus tell his disciples to baptize new believers in? (Matt. 28:19)

a. Name of Father; Son; and Holy Spirit. b. The River Jordan.
c. Name of Apostles. d. The red sea.

10. According to the Great commission, what should the new believers obey?

a. Everything Jesus commanded. b. The law of the country.
c. Teachings of the Pharisees. d. The 10 commandments.

11. What did Jesus say about the harvest? (Matt. 9:37,38)

a. The harvest is plentiful. b. Ask the Lord of the harvest.
c. The laborers are few. d. All of the above.

12. Paul established many ____________________.


a. Letters. b. Churches. c. Cities. d. Books of the bible.

## The Missionaries are sharing the Gospel of Jesus.




### Sending Out Maze

'...go to the lost sheep ... As you go, preach, saying, 'The Kingdom of Heaven is at hand!' Heal the sick ... Freely you received, so freely give.'



BibleWise

**Samuel Listens and Obeys**
—1 Samuel 2, 3, 7

# A Voice in the Night

One night after Samuel had gone to bed, he heard a voice calling him.

Color the speech cloud yellow if God was the speaker. Color the speech cloud orange if speaker was Samuel. Color the speech cloud green if Eli said it.

"Here I am You called me."

"I am about to do something in Israel."

"Samuel!"

"Samuel, Samuel!"

"Go lie down. If He calls you, say 'Speak, Lord.'"

"Speak, Lord. Your servant is listening."

"Here I am. You called me."

"I did not call. Go back and lie down."






Bible Pathway Adventures

BIBLE QUIZ

# TOWER OF BABEL

Match the question with the answer on the right.

## Questions

____ Why was it easy for people to work together to build the tower of Babel?

____ How high did they plan to build the tower?

____ Who came down to see the tower?

____ How did Yahweh stop their work?

____ Why did the people stop building the tower?

____ What was the name of the place where they tried to build the tower?

____ What does the biblical name Babel mean?

____ What happened to the people?

____ What materials did the people use to build the tower?

____ What did the people think the tower would protect them from?


## Answers

1. Land of Shinar
2. Yahweh / YHWH
